சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 02.06.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 38/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | சந்திரபோஸ் |
| தந்தை பெயர் | : | சம்பந்தம் |
| கிராமம் | : | காட்டூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| மாவட்டம் | | திருவாரூர் |
| தொழில் | : | அரிசி கடை |
| வயது | : | 39 |

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் காட்டூர் கிராமத்தில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பொறுப்பாளராக உள்ளேன் என்றால் சரிதான். அ.சா-1 விடுதலை சிறுத்தைகள் கட்சியில் மாவட்ட செயலாளர் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அ.சா-1ன் வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 100 கி.மீ இருக்கும் என்று சொன்னால் சரிதான். நானும், அ.சா-1ம் ஒரே ஊர் என்பதால் அடிக்கடி சந்தித்து கொள்வோம் என்று சொன்னால் ஆமாம். எனது வீட்டிற்கு திருவாரூரிலிருந்து கும்பகோணம் சாலையில் தான் செல்வது வழக்கம் என்றால் சரிதான்.

2. எனது முதல் விசாரணையில் பெயர் குறிப்பிட்டு நான்கு நபர்களும், பெயர் தெரியாத 5 நபர்களும் அ.சா-1ன் வீட்டு காம்பவுன்ட் சுவரில் பார்த்ததாக சொல்லியுள்ளதை காவல் ஆய்வாளர் விசாரணையிலும், மாவட்ட துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடமும், காவல் ஆய்வாளரிடமும் சொல்லாமல் முதல் முதலாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் உண்மையை சொல்லி தான் சாட்சியம் அளித்துள்ளேன்.

3. சம்பவம் நடந்தாக சொல்லப்படும் தேதியிரிருந்து எத்தனை நாட்கள் கழித்து காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 10 நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்வதற்கு முன்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள். துணை கண்காணிப்பாளர் அவர்களும், ஆய்வாளர்

அவர்களும் என்னை விசாரணை செய்வதற்கு சாட்சி சம்மன் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை.

4. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும், அங்கு இளம் சிறார்களையும், எதிரியையும் நான் பார்க்கவில்லை என்றும், எனது கட்சியின் மாவட்ட செயலாளர் தூண்டுதலின் பேரில் 10 நாட்கள் கழித்து பார்த்தாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.06.02 17:04:24 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.